பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

04 02 2026 6 45

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் உலக பொருளாதாரத்தில் இந்தியாவின் நிலையை மேலும் வலுப்படுத்தும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

2. ஸ்டார்ட்அப் மற்றும் இந்திய தொழில்முனைவோருக்கு புதிய வாய்ப்புகளை வழங்கும் வகையில் பட்ஜெட் அமைந்துள்ளது என்று மத்திய அரசு கூறியுள்ளது.

3. கல்விக்கும், மருத்துவ சேவைக்கும் ஒதுக்கப்படும் நிதி, வருங்கால சமுதாயத்திற்கான முதலீடு என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. சத்துணவு ஊழியர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கு அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஆஃப்கனிஸ்தானை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா-அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் உலக பொருளாதாரத்தில் இந்தியாவின் நிலையை மேலும் வலுப்படுத்தும் என்று மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த ஒப்பந்தம் தேசிய நலனை உறுதிப்படுத்தும் வகையில் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகவும், முன்னேற்றத்தை நோக்கியதாகவும் அமைந்துள்ளது என்று கூறினார்.

நாட்டின் வேளாண் மற்றும் பால்வளத் துறைகளின் முன்னேற்றத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருவதாகத் தெரிவித்த அவர், இந்தத் துறையில் உள்ளவர்களுக்கு வளமான எதிர்காலத்தை உறுதி செய்வதற்காக அவர் தொடர்ந்து பாடுபட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்திய-அமெரிக்க ஒப்பந்தத்தில் முக்கியமான துறைகளின் நலன்கள் பாதுகாக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கக் கூடியது என்றும் அவர் கூறினார்.

குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை மற்றும் ஜவுளி, ஆபரணங்கள், தோல் பொருட்கள் மற்றும் கடல்சார் உற்பத்திப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகள் இந்த ஒப்பந்தத்தால் பலனடையும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் உலகளாவிய தொழில்நுட்பங்களை அளித்து புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்றும் திரு. பியூஷ் கோயல் உறுதியளித்தார்.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்தியும் மற்ற கட்சிகளின் தலைவர்களும் செயல்படுவது கண்டிக்கத்தக்கது என்றும் திரு. கோயல் கூறினார்.

<<<<>>>>

மகளிர் தலைமையிலான பொருளாதார பங்களிப்பை ஊக்குவிக்கும் வகையில் இந்தியாவின் ஸ்டார்ட்அப் மற்றும்

தொழில்முனைவோருக்கு புதிய வாய்ப்புகளை அளிப்பதாக மத்திய பட்ஜெட் அமைந்துள்ளது என்று அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் **Atal** புத்தாக்க மாநாட்டில் உரையாற்றிய அவர், குறைந்த எண்ணிக்கையிலான ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் தொடங்கப்பட்ட நிலை மாறி, தற்போது **2** லட்சத்துக்கும் மேற்பட்ட ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் இந்தியாவில் செயல்படுவதாக கூறினார்.

உயிரி உற்பத்தி துறையில் இந்தியா உலக அளவில் ஏற்கனவே முன்னிலை வகிப்பதாக தெரிவித்த டாக்டர் ஜிதேந்திர சிங், இந்தத் துறைக்கு பட்ஜெட்டில் மேலும் வலுசேர்க்கும் வகையில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

கல்விக்கும், மருத்துவ சேவைக்கும் ஒதுக்கப்படும் நிதி செலவல்ல, வருங்கால சமுதாயத்திற்கான முதலீடு என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்தத் துறைகளில் கோடிக்கணக்கான மக்கள் பயனடையும்

வகையில் மாநில அரசு பல்வேறு முன்னோடித் திட்டங்களை நிறைவேற்றி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

ஏழை எளிய மக்களுக்கு அரிய அறுவை சிகிச்சைகளையும், தரமான சிகிச்சைகளையும் தமது அரசு அளித்து வருவதாகவும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் விஞ்ஞானத் துறையில் மாணவர்கள் பல்வேறு கண்டுபிடிப்புகளை மேற்கொள்வதற்கு அரசு ஊக்கமளித்து வருவதாக மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல்லில் நேற்று தனியார் அறக்கட்டளை சார்பில் நடைபெற்ற அறிவியல் திருவிழா நிறைவு நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

அறிவியல் சார்ந்த சமுதாயத்தை உருவாக்குவதே அரசின் இலக்கு என்று அவர் கூறினார்.

புதிய கண்டுபிடிப்புகளில் மாணவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் திரு. அன்பில் மகேஷ் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

திமுக அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிவிட்டதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சத்துணவு ஊழியர்களின் சம்பள உயர்வு, அவர்களுக்கு பணிப் பாதுகாப்பு போன்ற வாக்குறுதிகளை அரசு நிறைவேற்ற தவறிவிட்டதாக கூறினார்.

தூய்மைப் பணியாளர்கள், ஆசிரியர்கள் என அனைத்து தரப்பினரும் இதேபோன்ற ஊதியப் பிரச்சினையால் அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தி வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பதிலாக கைது நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்வதாக திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறினார்.

<<<<>>>>

மத்திய அரசின் பட்ஜெட்டில் இடம்பெற்றுள்ள அம்சங்களுக்கு தொழில் துறையினரும், பொதுமக்களும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

ஆதிச்சநல்லூரில் தொல்லியல் மையம் அமைக்கப்படுவதற்கு பொதுமக்களிடையே வரவேற்பு எழுந்துள்ளது.

**(Voice Byte - Public - 33 Sec)**

<<<<>>>>

சட்டப் பணிகள் ஆணைக் குழுவின் செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி தருமபுரியில் நடைபெற்றது.

இதில் நீதிபதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Dhandapani - 48 Sec)**

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

அமெரிக்காவுடன் நேர்மறையான பேச்சுகளை நடத்துவதற்கு ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு. **Masood Pezeshkian** தெரிவித்துள்ளார்.

-------------

இந்தியா-நேபாளம் இடையே இந்திய ரூபாயை மொத்தமாக பரிமாற்றம் செய்வது தொடர்பாக, நேபாள ராஷ்ட்ரிய வங்கி மற்றும் ரிசர்வ் வங்கி உயரதிகாரிகள் நிலையிலான பேச்சுவார்த்தை நடைபெற்றது.

-------------

மியான்மரில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவில் 6ஆக பதிவான இதன் தாக்கம் பங்களாதேஷ் மற்றும் கொல்கத்தாவில் நில அதிர்வுகளாக உணரப்பட்டது.

-------------

தலைநகர் தில்லியில் ஹோலி மற்றும் தீபாவளி பண்டிகைகளின்போது குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

-------------

வாட்ஸப் செயலியை அளிக்கும் மெட்டா நிறுவனம் சட்டத்தை மதிக்காவிட்டால் இந்தியாவில் இருந்து வெளியேற வேண்டும் என்று உச்சநீதிமன்றம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

-------------

நடப்பு நிதியாண்டின் கடைசி வேலை நாளான வரும் மார்ச் 31ஆம் தேதி அனைத்து வங்கிக் கிளைகளும் செயல்பட வேண்டும் என்று ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ளது.

-------------

ஆசிய விளையாட்டுப் போட்டியின் சைக்ளிங் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்று ஈரோடு மாவட்டம் பெருமாள்மலையைச் சேர்ந்த மாணவர் சுகந்தனுக்கு, ஊர்மக்கள் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

-------------

பெரம்பலூரில் உணவுப் பாதுகாப்பு விதிகளை முறையாகப் பின்பற்றாத 11 கடைகளுக்கு தலா 2 ஆயிரம் ரூபாய் வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

-------------

காஞ்சிபுரம் அருள்மிகு வரதராஜ பெருமாள் கோவில் தெப்போற்சவம் நேற்று விமரிசையாக நடைபெற்றது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று ஆஃப்கனிஸ்தானை எதிர்கொள்கிறது.

ஹராரேயில் இந்தப் போட்டி இந்திய நேரப்படி பிற்பகல் ஒரு மணிக்கு தொடங்குகிறது.

இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணி வரும் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள இறுதியாட்டத்தில் இங்கிலாந்து அணியுடன் மோதும்.

முன்னதாக நேற்று Bulawayo-வில் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி 27 ரன் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

------------

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தில்லி அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் குஜராத் அணியை வென்றது.

வதோதராவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் விளையாடிய குஜராத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 168 ரன் எடுத்தது.

169 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய தில்லி அணி, 15 புள்ளி 4 ஓவரில் இலக்கை எட்டியது.

**<<<<The End>>>>**